بسم الله الرحمن الرحيم

(1)மௌலிது

1. மௌலிது என்றால் என்ன?

நமது உயிருக்குயிரான நபி (ஸல்) அவர்களின் பிறந்த நாளில் மகிழ்ச்சியை வெளிபடுத்தி அவர்களின் மீது புகழ்பாடல்களைப் படித்து சலவாத் ஓதி அவர்களின் வாழ்க்கைச் சரித்திரங்களைக் கூறியும் கேட்டும் மகிழ்ந்து உணவுப் பண்டங்களை பரிமாறிக் கொள்ளும் நிகழ்வுக்கு நமது நாட்டில் மௌலிது ஷரீப் என்று சொல்லப் படுகிறது.

---

2. பெருமானாரைப் புகழ்வது பர்ளா? வாஜிபா?

1) நபி (ஸல்) அவர்களை நேசிப்பது ஈமானின் ஷர்த்- நிபந்தனையாகும். நபி (ஸல்) அவர்களை நேசிக்காதவன், நேசிக்க தேவையில்லை என்பவன் காபிர் ஆவான்.

لاَ يُؤْمِنُ أَحَدُكُمْ حَتَّى أَكُونَ أَحَبَّ إِلَيْهِ مِنْ وَالِدِهِ وَوَلَدِهِ وَالنَّاسِ أَجْمَعِينَ

தன் பெற்றோரை விட, பிள்ளையை விட, மக்கள் அனைவரையும் விட நபி (ஸல்) அவர்களை அதிகம் நேசிக்காதவரை நீங்கள் முஃமினாக முடியாது.

(புஹாரி - 14, தாரமி - 2740, நஸயி - 4997, இப்னு ஹிப்பான் - 178, அஹ்மத் - 12522, அல்ஹாகிம் – 3852)

2) உலகில் உள்ள அனைத்தையும் விட அல்லாஹ்வையும்,ரஸூலையும் அதீகம் நேசிக்க வேண்டும் என்று குர்ஆனும் வலியுறுத்துகிறது. **(**சூரா அத்தவ்பா : வசனம் **24)**

قُلْ إِنْ كَانَ آبَاؤُكُمْ وَأَبْنَاؤُكُمْ ....(سورة التوبة 24)

3) நபிகளாரை கண்ணியப்படுத்துவது ஒவ்வொரு மு:மினின் மீதும் கடமை

إِنَّا أَرْسَلْنَاكَ شَاهِدًا وَمُبَشِّرًا وَنَذِيرًا (8) لِتُؤْمِنُوا بِاللَّهِ وَرَسُولِهِ وَتُعَزِّرُوهُ وَتُوَقِّرُوهُ وَتُسَبِّحُوهُ بُكْرَةً وَأَصِيلًا (9) (سورة الفتح)

{ وَتُعَزِّرُوهُ } وتقووه بتقوية دينه ورسوله { وَتُوَقِّرُوهُ } وتعظموه

{ وَتُسَبِّحُوهُ } وتنزهوه أو تصلوا له

(تفسير البيضاوي لناصرالدين أبو سعيد عبد الله)

நிச்சயமாக நாம் உம்மைச் சாட்சியாளராகவும், நற்செய்தி கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிப்பவராகவும் நாம் அனுப்பியுள்ளோம். (ஏனெனில்) அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர் மீதும் நீங்கள் நம்பிக்கை கொள்வதற்காகவும், நபி (ஸல்) அவர்களுக்கு (நீங்கள்) உதவி செய்வதற்காகவும், அவர்களை கண்ணியப் படுத்துவதற்காகவும், காலையிலும்,மாலையிலும் நீங்கள் அவர்களை பரிசுத்தப் படுத்துவதற்காகவும் (அல்லது) அவர்கள் மீது சலவாத்து சொல்வதற்காகவும் (நாம் உம்மை அனுப்பியுள்ளோம்) (சூரா அல்:பத்ஹ் **7-8**) (தப்ஸீர் அல் பைழாவி)

4) நபிகளாரைப் பற்றி புகழ்வதே அன்பின் அடையாளமாகும்.

وَاذْكُرُوا نِعْمَةَ اللَّهِ عَلَيْكُمْ (سورة المائدة 7,20 سورة ابراهيم 6)

அல்லாஹ்வின் அருட்கொடையை நினைவு கூறுங்கள்.

وَأَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ (سورة الضحى 11)

உங்கள் ரப்பின் அருட்கொடையைப் பற்றிப் பேசிக்கொண்டே இருங்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களை விட பெரிய அருட்கொடை எதுவும் இல்லை. எனவே பெருமானாரைப் புகழ்வது இறைக் கட்டளை. அதை செய்வது நம்மீது f பர்ள், வாஜிப் ஆகும்.

5) நபி (ஸல்) அவர்களைப் புகழ்வது அல்லாஹ்வின் வழிமுறை. குர்ஆனிலும் பல நூறு ஆயத்துகள் நபியை புகழ்கின்றன. பார்க்க-

1: **لَقَدْ جَاءَكُمْ رَسُولٌ مِنْ أَنْفُسِكُمْ عَزِيزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ حَرِيصٌ عَلَيْكُمْ بِالْمُؤْمِنِينَ رَءُوفٌ رَحِيمٌ** (سورة التوبة128)

2: **وَمَا أَرْسَلْنَاكَ إِلَّا رَحْمَةً لِلْعَالَمِينَ** (سورة الانبياء107)

3: **إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا** (سورة الاحزاب56)

4: **وَمَا يَنْطِقُ عَنِ الْهَوَى** (سورة النجم3)

5: **وَإِنَّكَ لَعَلَى خُلُقٍ عَظِيمٍ** (سورة القلم4)

6: **أَلَمْ نَشْرَحْ لَكَ صَدْرَكَ** (سورة الشرح1)

6) நபி (ஸல்) அவர்களைப் புகழ்வது நபியின் சுன்னத் வழிமுறையாகும். பார்க்க-

أَنَا سَيِّدُ وَلَدِ آدَمَ يَوْمَ الْقِيَامَةِ وَأَوَّلُ مَنْ يَنْشَقُّ عَنْهُ الْقَبْرُ وَأَوَّلُ شَافِعٍ وَأَوَّلُ مُشَفَّعٍ

நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்- நான் மனிதர்கள் அனைவருக்கும் தலைவராக மறு உலகில் இருப்பேன். மண்ணறையில் இருந்து நானே முதலில் எழுந்து வருவேன். நானே முதலில் பரிந்துரை செய்வேன். எனது பரிந்துரையே முதலில் ஏற்க்கப்படும்.

(முஸ்லிம்- 5893, அஹ்மத் - 10742, திர்மிதி- 3261, அபூதாவூத் - 4662, இப்னு ஹிப்பான் - 6364, இப்னு மாஜா - 4400)

أَنَا النَّبِيُّ لاَ كَذِبْ أَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ

நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்- நானே நபி. இது பொய்யல்ல. நான் அப்துல் முத்தலிபின் பேரன்

(புஹாரி - 2799, முஸ்லிம் - 4570, அஹ்மத் - 2384, திர்மிதி - 1689, அபூதாவூத் - 487, இப்னு ஹிப்பான் - 4680,பைஹகி - 13457, நஸயி - 8535)

7) நபியின் சலவாத் நபில் தொழுகையை விட மேலானது. பார்க்க

فقال أبي بن كعب : يا رسول الله إني أكثر الصلاة عليك فكم أجعل لك منها ؟ قال : ما شئت قال : الربع ؟ قال : ما شئت و إن زدت فهو خير لك قال : النصف ؟ قال : ما شئت و إن زدت فهو خير لك قال : الثلثين ؟ قال : ما شئت و إن زدت فهو خير قال : يا رسول الله اجعلها كلها لك قال : إذا تكفي همك و يغفر لك ذنبك

உபை இப்னு கஃப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதரே உங்களின் மீது நான் அதிகமாக சலவாத்து சொல்கிறேன். (எனவே) நான் உங்களுக்கு எவ்வளவு சலவாத்து சொல்வது? என்று

கேட்டேன். நீ நாடிய அளவு சொல் என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள். (நான் நபிலான வணக்கங்களுக்காக ஒதுக்கிய நேரங்களில்) நான்கில் ஒரு பகுதி சொல்லட்டுமா? என்று கேட்டேன். நபி (ஸல்) அவர்கள் நாடிய அளவு சொல் அதிகமாக்கினால் அது உனக்கு சிறந்தது என்று சொன்னார்கள். பாதி சொல்லட்டுமா? என்று கேட்டேன். நீ நாடிய அளவு சொல் அதிகமாக்கினால் அது உனக்கு சிறந்தது என்று சொன்னார்கள். மூன்றில் இரண்டு பகுதி சொல்லட்டுமா? என்று கேட்டேன். நீ நாடிய அளவு சொல் அதிகமாக்கினால் அது உனக்கு சிறந்தது என்று சொன்னார்கள். உங்களுக்காக முழுவதையும் ஆக்குகிறேன் என்றேன். அப்படி செய்தால் அது உன் கவலைக்கு போதுமாகும். உன்னுடைய பாவம் மன்னிக்கப்படும் எனக்கூறினார்கள்.

(திர்மிதி- 2505, அல்ஹாகிம் - 3626, பைஹகி - 1499, நஸயி - 8535)

---

3. நபி (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாடல் படிக்கலாமா? அது சுன்னத்தா?

நபி (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பல சஹாபாக்கள் பாடல்கள் படித்துள்ளனர். அவர்களின் பெயர்களும் பாடல்களும் ஹதீஸ்களில் முழுமையாக இடம்பெற்றுள்ளன.

عَنْ مُوسَى بْنِ عُقْبَةَ قَالَ : أَنْشَدَ النَّبِيَّ –صلى الله عليه وسلم– كَعْبُ بْنُ زُهَيْرٍ بَانَتْ سُعَادُ فِى مَسْجِدِهِ بِالْمَدِينَةِ

(بيهقي 21673)(الحاكم 6478)

1) ஹழ்ரத் கஃப் பின் ஜுஹைர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாடி பானத் சுஆத் என்ற கவிதைத் தொகுப்பையே இயற்றி நபி (ஸல்) அவர்களிடத்தில் மஸ்ஜிதில்

வைத்துப் படித்துக் காட்டினார்கள்.(அல்ஹாகிம் - 6478, பைஹகி - 21673)

அதனால் மகிழ்ந்த நபி (ஸல்) அவர்கள் தங்கள் முபாரக்கான போர்வையை அவர்களுக்கு கொடுத்தனர்.பின்னர் அந்தப் போர்வையை கஃப் பின் ஜுஹைர் (ரலி) மரணத்திற்குப்பின் **24000** தீனார் கொடுத்து முஆவியா (ரலி) வாங்கிக் கொண்டார்கள். (தஃரீபுல் அஹ்யா)
இதிலிருந்து நபி (ஸல்) அவர்களைப் புகழ்ந்து கவிதை படிப்பது சுன்னத்து. அதை மஸ்ஜிதில் வைத்து படிப்பது சுன்னத்து. அதை படிப்பவர்களுக்குத் தரப்படும் உணவுப் பண்டங்கள் போன்றவற்றை மதிப்பது கண்ணியப் படுத்துவது சுன்னத்து என்று தெரிகிறது.

عَنْ عَائِشَةَ قَالَتْ كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَضَعُ لِحَسَّانَ مِنْبَرًا فِي الْمَسْجِدِ يَقُومُ عَلَيْهِ قَائِمًا يُفَاخِرُ عَنْ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَوْ قَالَ يُنَافِحُ عَنْ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ

(ابو داؤد 5017)(ترمذي 3082)(احمد 25171)(طبراني 3501)

2) ஹழ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களைப் புகழ்ந்து கவிதைகளைப் பாடினர். நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதிற்குள் தனி மேடை அமைத்து அதில் அவர்களை அமரச் செய்து கவிதை படிக்கச் சொல்லி கேட்டு மகிழ்ந்தனர்.

(அபூதாவுத்- **5017**, திர்மிதி - **3082**, அஹ்மத் -**25171**, தப்ரானி-**3501**)

اللَّهُمَّ أَيِّدْهُ بِرُوحِ الْقُدُسِ

(بخاري453)(مسلم6539)(ابن حبان1635)(نساي795)

(بيهقي3398) (احمد22759)(طبراني3507)

3) இறைவன் ஜிப்ரயீல் (அலை) அவர்களின் மூலம் ஹஸ்ஸானுக்கு உதவி செய்வானாக என்று நபி (ஸல்) துஆச் செய்தார்கள்.

(புஹாரி- 453, முஸ்லிம்- **6539**, இப்னுஹிப்பான்- **1635**, நஸயி - 795, பைஹகி - 3398, அஹ்மத் - 22759, தப்ரானி -3507)

இதிலிருந்து மஸ்ஜிதிற்குள்ளேயே அனைவரும் கூடி நபிப்புகழ் கவிதைகளைப் படிப்பது சுன்னத் என்றும், நபிப்புகழ் பாடுபவரை சங்கை படுத்த வேண்டும் என்றும், தனி மேடை, ஜமுக்காளம், அலங்காரம் செய்யலாம் என்றும் தெரிகிறது. அது இஸ்ராப் வீண் விரயம் என்று சொன்னால் நபி (ஸல்) அவர்கள் பயான் மேடை இருக்க பாடல் கேட்க தனீ மேடை அமைத்தது வீண் விரயம் என்று கூறவேண்டியது வரும். மேலும் நபிப் புகழ் பாடல்களை படிப்பவர்களுக்கு அல்லாஹ்வின் உதவி மலக்குகள் மூலமாக வருகிறது என்பதும் தெரிகிறது.

---

4. நபி (ஸல்) பிறந்தநாளை கொண்டாடலாமா?

நபி (ஸல்) பிறந்த நாளுக்குத் தனிச்சிறப்பு இருப்பதும் அதற்காக மகிழ்ச்சியை வெளிபடுத்த வேண்டும் என்பதும் ஹதீஸ்களில் வருகிறது.

عَنْ أَبِى قَتَادَةَ الأَنْصَارِىِّ رضى الله عنه..... وَسُئِلَ عَنْ صَوْمِ يَوْمِ الاِثْنَيْنِ قَالَ ذَاكَ يَوْمٌ وُلِدْتُ فِيهِ وَيَوْمٌ بُعِثْتُ أَوْ أُنْزِلَ عَلَىَّ فِيهِ.

(مسلم 2804)(احمد 23215)(الحاكم 4179)

1) ஒரு சஹாபி திங்கட்கிழமை நோன்பு வைக்கலாமா? என்று கேட்டதற்கு ஆம் அன்றுதான் நான் பிறந்தேன் என்றார்கள்.

(முஸ்லிம்- **2804**, அஹ்மத் 23215, ஹாகிம் - **4179**)

قَالَ عُرْوَةُ وَثُوَيْبَةُ مَوْلاَةٌ لأَبِى لَهَبٍ كَانَ أَبُو لَهَبٍ أَعْتَقَهَا فَأَرْضَعَتِ النَّبِىَّ – صلى الله عليه وسلم – فَلَمَّا مَاتَ أَبُو لَهَبٍ أُرِيَهُ بَعْضُ أَهْلِهِ بِشَرِّ حِيبَةٍ قَالَ لَهُ مَاذَا لَقِيتَ قَالَ أَبُو لَهَبٍ لَمْ أَلْقَ بَعْدَكُمْ غَيْرَ أَنِّى سُقِيتُ فِى هَذِهِ بِعَتَاقَتِى ثُوَيْبَةَ

(بخاري 5101)(بيهقي 1915)

وذكر السهيلي أن العباس رضي الله تعالى عنه قال لما مات أبو لهب رأيته في منامي بعد حول في شر حال فقال ما لقيت بعدكم راحة إلا أن العذاب يخفف عني كل يوم اثنين قال وذلك أن النبي ولد يوم الاثنين وكانت ثويبة بشرت أبا لهب بمولده فأعتقها

(عمدة القاري شرح صحيح البخاري)

2) அபூலஹப் நபி (ஸல்) பிறந்த நாளில் விரல் நீட்டி அடிமையான சுவைபாவை உரிமைவிட்டதால் வேதனை குறைக்கப்படுகிறது என்று வருகிறது.

(புஹாரி- **5101**, பைஹகி - **1915**)

(புஹாரி ஷரஹ் உம்ததுல் காரி)

---

5. இமாம்களின் கருத்து:

தமிழகத்தில் அனைத்து மத்ரஸாக்களிலும் பத்ஹுல்முயீன் எனும் ஷாபிஃ சட்ட நூல் ஓதித்தரப் படுகிறது. அதன் விரிவுரையான இஆனா வில் எழுதப் பட்டுள்ளது.

1) அல்லாமா சுயூத்தி (ரலி) அவர்களிடம் ரபீவுல் அவ்வல் மாதத்தில் நடைபெறும் மௌலிது ஷரீபின் சட்டம் என்ன? அது கூடுமா? கூடாதா? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் பதிலளித்தார்கள்-

நபி (ஸல்) அவர்களின் மௌலிது என்ற பெயரில் மக்கள் ஒன்று திரண்டு பெருமானாரின் வரலாறுகளைக் கூறி குர்ஆன் ஷரீபும் ஓதி அதன்பின் அனைவரும் உணவுப் பொருட்கள் பங்கீடு செய்வது நல்ல பித்அத் ஆகும்.ஏனெனில் இது நபி (ஸல்) அவர்களை கண்ணியப் படுத்துவதும் அவர்களின் பிறப்பால் மகிழ்ச்சியடைவதமாகும்.

(இஆனா ஃபஸ்லுன் பிஸ்ஸதாக் - பக்கம் 606)

2) அதே இஆனாவில் 607ல் இமாம் சுபுகி (ரஹ்) மௌலிது மஜ்லிஸில் கலந்து கொண்ட நிகழ்ச்சியையும் இப்னு ஜவ்ஜி (ரஹ்) மௌலிதை ஆதரித்தும் குறிப்பிட்டுள்ளார்கள்.

3) மேலும் பிரபல தாபியீன்களில் ஒருவரான இமாம் ஹசன் பசரி (ரலி) மேலும் ஜுனைதுல் பஃதாதி (ரலி), மஃரூபுல் கர்கி (ரலி), இமாம் யாபிஃ (ரலி), சரீ சகதீ (ரலி), மன்னர் அப்துல் மலிக் பின் மர்வான் போன்றோர்கள் ரபீவுல் அவ்வலில் மௌலிது ஷரீபை புகழ்ந்துரைத்த விரிவான தகவல்களையும் எழுதியுள்ளார்கள்.

4) இன்று அனைத்து மத்ரஸாக்களிலும் ஓதித்தரப்படும் தப்ஸீர் ஜலாலைன், அல்இத்கான் மற்றும் பலநூறு கிதாபுகளின் ஆசிரியர் அல்லாமா ஜலாலுத்தீன் சுயூத்தி (ரலி) தங்களின் அல்வஸாயில் ஷரஹுஷ் ஷமாயில் எனும் கிதாபில் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்கள்.

ஒரு வீட்டில் மௌலிது ஷரீப் ஓதப்பட்டால் அல்லாஹ் பஞ்சம், கொள்ளை, வியாதிகள், நெருப்பு, ஆபத்துகள், பொறாமை, தீய கண்ணேறு, திருடர்கள் அனைத்தையும்விட்டு அவ்வீட்டாரை பாதுகாக்கின்றன.

(இஆனா ஃபஸ்லுன் பிஸ்ஸதாக் - பக்கம் 608)

6.சுன்னத் ஜமாஅத்தின் அடையாளம் மௌலிது ஷரீப்:

سئل ابو حنيفة رحمه الله عن مذهب اهل السنة والجماعة فقال ان تفضل الشيخين اي ابا بكر وعمر رضي الله عنهما وتحب الختنين اي عثمان وعلي رضي الله عنهما وان ترى المسح على الخفين وتصلي خلف كل بر وفاجر.(الفقه الاكبر : صفحة86)

அபூ ஹனீபா (ரஹ்) அவர்களிடம் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் என்றால் என்ன? என்று கேட்டதற்கு 1. அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) இவ்விரு சஹாபாக்களை சங்கை படுத்துதல். 2. அலி (ரலி), உஸ்மான் (ரலி) இவ்விரு சஹாக்களை பிரியம் கொள்ளுதல். 3.காலுரையின் மீது மஸஹ் செய்தல். 4. நல்லோர்,தீயோர் பின் தொழுதல்.

(அல் பிக்ஹுல் அக்பர் - பக்கம் 86)

காரணம் அக்காலத்தில் அதுதான் ஸுன்னத் ஜமாத்தினருக்கும் வழிகெட்ட பிரிவினருக்கும் பிரச்சனைக்குரிய விஷயமாக இருந்தது. இன்றைக்கு ஸுன்னத் ஜமாத்தினருக்கும் வழிகெட்ட கூட்டத்தினருக்கும் உள்ள முக்கிய வேறுபாடாக மௌலிது, 20 ரக்அத் தராவீஹ், ஜியாரத், ஈசால் சவாபு போன்றவைகள் உள்ளன. எனவே இவற்றை ஏற்றுக் கொண்டரே ஸுன்னத் ஜமாஅத்தினராகும்.

7.கடமையில்லாததும் சில நேரம் கடமையாகும்:

وَنَزَلَ فِي عَبْد اللَّه بْن سَلَام وَأَصْحَابه

(تفسير الجلالين و الرازي)

ஒட்டகக் கறி தின்பது இஸ்லாத்தில் கடமையில்லை. ஜாயிசான- அனுமதிக்கப்பட்ட ஒரு காரியம் என்றாலும் யூத மதத்திலிருந்து இஸ்லாத்திற்கு வந்த அப்துல்லாஹ் பின் சலாம் (ரலி) அவர்கள் மற்றும் அவர்களின் தோழர்கள் யூத வழக்கப்படி ஒட்டகக்கறி தின்பதை தவிர்த்து வந்தனர். உடனே அல்லாஹ் இஸ்லாத்தில் முழுமையாக

நுழையுங்கள் ادْخُلُوا فِي السِّلْمِ كَافَّةً என்று உத்தரவிட்டு அவர்களுக்கு ஒட்டகக்கறி சாப்பிடுவதை கடமையாக்கினான்.

இதன் படி மௌலிது ஷரீப் முஸ்தஹப்பாக இருப்பினும் அதை மறுக்கும் வஹ்ஹாபிய வழி கெட்ட கூட்டதாரிடமிருந்து ஸுன்னத் ஜமாத்தினரை வேறுபடுத்தி காட்ட மௌலிது கட்டாயமாக்கப்படும். ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு மஸ்ஜிதிலும் நபி (ஸல்) செய்து காட்டியப்படி தனிமேடை உள்பள்ளியிலேயே அமைத்து அலங்காரங்கள் செய்து மௌலிது ஓத வேண்டும். அதை மறுப்பவர் ஹதீஸை மறுப்பவராக இருப்பதால்- அவர் இமாமாக இருப்பினும் நீக்கப்பட வேண்டும். நூற்றுக் கணக்கான பித்அத்துகள் சமூகத்தில் நடக்கும் நிலையில் முஸ்தஹப்பான சுன்னத்தான ஒரு காரியத்தை பித்அத் என்று காட்டி அதை ஹராம் என்ற அளவிற்கு வாதம் செய்பவர் குழப்பவாதியே அன்றி வேறில்லை. ஏனெனில் ஒரு நல்ல காரியம் பெரும்பாலான இஸ்லாமிய மக்களிடையே பழக்கத்தில் வந்துவிட்டால் அதைச் செய்வது அவசியமாகும். பார்க்க-

ولا بأس به عقب العيد لأن المسلمين توارثوه فوجب اتباعهم

(الدر المختار – باب صلاة العيدين)

மேலும் ஒரு காரியம் மக்ரூஹாக இருப்பினும்கூட அதைத்தடுத்தால் பித்னா வரும் என்று அஞ்சினால் அதை அப்படியே விட்டு விட வேண்டும் என்பது பிக்ஹ் கிதாபுகளின் தீர்ப்பாகும். ஏனெனில் குழப்பம் கொலையை விட கொடியது. ஆதலால்தான் ஸஜ்தா சஹ்வு வாஜிபாக இருப்பினும் பித்னாவை அஞ்சி ஜும்ஆ, ஈது பெருநாள் தொழுகையில் அதை விட்டுவிட அனுமதியுள்ளது.

والأولى ترك سجود السهو في الجمعة والعيدين إذا حضر فيها جمع كثير لئلا يشتبه الأمر على المصلين

(الفقه على المذاهب الأربعة – حكم سجود السهو)

8.பர்ள், வாஜிப் தொழுகை நோன்பு எதுவும் செய்யாத ஒருவன் மௌலிதை மட்டும் முக்கியத்துவம் கொடுத்து செய்கிறான் என்றால் அதைத் தடுக்கலாமா?

ஒருவன் தொழுகுவதில்லை ஆனால் சுன்னத்தான தாடிவைத்திருக்கிறான். ஒருவன் தொழுகுவதில்லை ஆனால் சுன்னத்தான திருமணம் செய்திருக்கிறான். ஒருவன் கடமையான ஹஜ்ஜுக்கு செல்லவில்லை. ஆனால் சதகா செய்கிறான். ஒருவன் தாய்,தந்தையை கவனிப்பதில்லை. ஆனால் ஊர்ஊராக சென்று பயான் செய்கிறான்.

இப்படிப்பட்டவர்களின் சட்டம் என்ன? என்றால் நீங்கள் கடமையை நிறைவேற்றுங்கள் என்று அவர்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும் மாறாக தாடியை எடு, திருமணம் செய்யாதே. தர்மம் செய்யாதே, பயான் செய்யாதே என்று தடுக்கக் கூடாது.

---

(2)**பித்அத்**

1. பித்அத் என்றால் என்ன?

பித்அத் என்பது اختراع في الدين மார்கத்திலே புதிய காரியங்களை உண்டு பண்ணுதல் ஆகும். இது இரண்டு வகையாகும்.

1. பித்அத்தே ஹஸனா 2. பித்அத்தே ஸய்யிஆ

1) பித்அத்தே ஹஸனா:

ஆகுமான நல்ல பித்அத். - இதற்கு அசல் ஆதாரம் குர்ஆன், ஹதீஸிலே இருக்கும். ஆனால் நடைமுறையில் அமைப்பு புதிதாக இருக்கும். இதைச்செய்வது குற்றமாகாது. மாறாக நன்மை கிடைக்கும். உதாரணமாக மத்ரஸாக்கள் கட்டுவது, 7ஜும்ரா வைப்பது, நஹ்வு இலக்கண இலக்கியங்கள் ஓதிக்கொடுப்பது, தராவீஹ்ஜமாஅத், ஈசால் சவாபு, மௌலிது ஷரீப்,மீலாது விழா போன்றவை.

2) பித்அத்தே ஸய்யிஆ:

தீய பித்அத் -இதற்கு அசல் ஆதாரம் குர்ஆன், ஹதீஸிலே இருக்காது. இத்தகைய பித்அத்துகளை செய்வதால் பாவம் உண்டாகும். உதாரணமாக பெண்கள் வீட்டை விட்டு வெளியேறி உலகக் கல்வி படித்தல், ஸஹாபாக்களை குறை கூறுதல், ஷியா, முஃதஜிலாக்களின் கொள்கைகள் -இவையாவும் பித்அத்தே ஸய்யிஆ ஆகும்.

பித்அத் இருவகைகளுக்கு ஆதாரம்:

عَنْ جَرِيرِ بْنِ عَبْدِ اللَّهِ عن رسول الله(صل)..... مَنْ سَنَّ فِى الإِسْلاَمِ سُنَّةً حَسَنَةً فَعُمِلَ بِهَا بَعْدَهُ كُتِبَ لَهُ مِثْلُ أَجْرِ مَنْ عَمِلَ بِهَا وَلاَ يَنْقُصُ مِنْ أُجُورِهِمْ شَىْءٌ وَمَنْ سَنَّ فِى الإِسْلاَمِ سُنَّةً سَيِّئَةً فَعُمِلَ بِهَا بَعْدَهُ كُتِبَ عَلَيْهِ مِثْلُ وِزْرِ مَنْ عَمِلَ بِهَا وَلاَ يَنْقُصُ مِنْ أَوْزَارِهِمْ شَىْءٌ

(مسلم 6975)(ابن حبان 112)(نسائ 2335)(ابن ماجة208) (الدارمي 514)(بيهقي 7531)(احمد 19764)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள் -இஸ்லாத்தில் ஒரு நல்ல பழக்கத்தை ஒருவர் ஏற்படுத்தினால் அதைப் பின்பற்றி மற்றவர்களும் செய்தால் அவ்வாறு செய்தவர்களின் நனமையைப் போன்றே அதை ஆரம்பித்தவருக்கும் தரப்படும்.அதனால் இவர்களின் நன்மைகளில் எதுவும் குறைக்கப்படாது.

அதே போல் இஸ்லாத்தில் ஒரு தீய பழக்கத்தை ஒருவர் ஏற்படுத்தினால் அதைப் பின்பற்றி மற்றவர்களும் செய்தால் அவ்வாறு செய்தவர்களின் பாவத்தைப் போன்றே அதை ஆரம்பித்தவருக்கும் தரப்படும்.அதனால் இவர்களின் பாவங்களில் எதுவும் குறைக்கப் படாது.

(முஸ்லிம் - 6975, இப்னு ஹிப்பான் - 112, நஸயி - 2335, அஹ்மத் - 19764, இப்னு மாஜா – 208, தாரமி – 514, பைஹகி- 7531)

قال العلماء: هذه الاحاديث من قواعد الاسلام، وهو أن كل من ابتدع شيئا من الشر كان عليه وزر من اقتدى به في ذلك فعمل مثل عمله إلى يوم القيامة، وكل من ابتدع شيئا من الخير كان له مثل أجر كل من يعمل به إلى يوم القيامة

(رد المحتار)

மேற்சென்ற ஹதீஸை வைத்து உலமாக்கள் சொன்னார்கள்: இந்த ஹதீஸாகிறது இஸ்லாத்தின் அடிப்படைச் சட்டங்களில் ஒன்றாக இருக்கிறது. அதாவது தீங்கான காரியத்தை ஒருவர் புதிதாக ஏற்படுத்தினால் கியாமத் வரை அதை யார் செய்தாலும் அதன் பாவம் அவருக்குப் போய் சேரும். அதே போல் நன்மையான காரியத்தை ஒருவர் புதிதாக ஏற்படுத்தினால் கியாமத் வரை அதை யார் செய்தாலும் அதன் நன்மை அவருக்குப் போய் சேரும். (ரத்துல் முக்தார்)

عَنْ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا قَالَتْ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ أَحْدَثَ فِي أَمْرِنَا هَذَا مَا لَيْسَ فِيهِ فَهُوَ رَدٌّ

(بخاري 2697)(مسلم 4589)(ابن حبان26)(ابو داؤد4606)(ابن ماجة14) (الدار القطني82)(الدارمي 514)(بيهقي 20323)(احمد 27083) **மேலும்** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் - மார்க்கத்தின் அடிப்படையில் இருந்து உண்டாகாத ஒன்றை புதிதாக யார் உண்டாக்குகிறாரோ அது மறுக்கப்பட்டதாகும்.

(புஹாரி - **2697**, முஸ்லிம் - **4589**, இப்னு ஹிப்பான் **26**, அபூதாவுத் - **4606**, இப்னு மாஜா – **14**, தாரகுத்னி – **82**, தாரமி- **514**, பைஹகி- **20323**, அஹ்மத்– **27083**)

எனவே எதன் அசல் ஆதாரம் மார்க்கத்தில் உள்ளதோ அது பித்அத் அல்ல என்று தெரிகிறது.

2.புகஹாக்கள் பித்அத்தை 5 வகையாக் கூறுகின்றனர்?

1. வாஜிபான,கட்டாயமான பித்அத்:

நபி (ஸல்) காலத்தில் இல்லாத செயல்- ஆனால் மார்க்கம் தடுக்காத செயல். அது இன்று மார்க்கம் நிலை நிற்பதற்கு அவசியமாகத் தேவைப்படுகிறது.

<u>உதாரணம்</u>: தீனுடைய மதரஸாக்கள் ஏற்படுத்துதல், உசூல் பிக்ஹ் ,உசூல் ஹதீஸ், அஸ்மாவுர் ரிஜால் போன்றவற்றை தொகுத்தல், நஹ்வு, சர்ஃப் அரபி இலக்கணம் படித்தல்.

2. முஸ்தஹப்பான பித்அத்:

இந்த செயல் நபி (ஸல்) காலத்தில் இதன் அசல் இருக்கும். நடைமுறை பிற்காலத்தில் உண்டாக்கப்பட்டிருக்கும். மார்க்கத்தில் எந்த தடையும் இருக்காது.

<u>உதாரணம்</u>: தராவீஹ்ஜமாஅத், மௌலிது ஷரீப், பாத்திஹா, ஈசால் சவாபு, மீலாது மாநாடு.

3. முபாஹான ஆகுமான பித்அத்:

நபி (ஸல்) காலத்தில் நபி (ஸல்) காலத்தில் இல்லாத செயல் எனினும் மார்க்கத்தில் அதற்கு எந்த தடையுமிருக்காது. மார்க்கம் தடுக்காத வரை அனைத்தும் ஆகுமானதே اصل الشيئ الاباحة என்ற உசூல் பிக்ஹின் சட்ட அடிப்படையில் இது அனுமதிக்கப்பட்டதாகும்.

<u>உதாரணம்</u>: நல்ல உடைகள், விதவிதமான உணவுகள், வாகனங்கள், போன் மற்றும் புதிய கண்டு பிடிப்புகள்.

4. மக்ரூஹான பித்அத்:

எந்த பித்அத்தை செய்வதால் ஒரு சுன்னத் விடுபடுகிறதோ அது மக்ரூஹான பித்அத் ஆகும்.

<u>உதாரணம்</u>: தொப்பி இன்றி தொழுவது, தாடியை ஒரு பிடியை விட குறைப்பது.

5. ஹராமான பித்அத்:

குர்ஆன்,ஹதீஸிற்கு மாற்றமான, சஹாபாக்களின் வழிமுறைக்கு மாற்றமான கொள்கைகள், செயல்கள் அனைத்தும் வழிகேடான ஹராமான பித்அத்ஆகும்.

<u>உதாரணம்</u>: ஜப்ரியா, முஃதஜிலா, ஷியா போன்ற வழி கெட்ட கூட்டத்தாரின் கொள்கைகள், இறைவனுக்கு உருவமுண்டு, இறைவன் பொய்சொல்லலாம் போன்ற வஹ்ஹாபியக் கொள்கைகள், ஸஹாபாக்களை குறைகூறுதல். பார்க்க -

(தப்ஸீர் ரூஹுல் மஆனி(14-192), தப்ஸீர் குர்துபி(87-2), மிர்காத்-பாபுல் இஅதிஸாம் , ஷாமி பாபுல் இமாமத், உம்ததுல் காரி(11-126), தஹ்தீபுல் அஸ்மாஇ வல்லுகாத், இஹ்யாஉலூமுத்தீன் 3-2)

3.ஸஹாபாக்களின் பித்அத்துகள்.

ரஸூல் (ஸல்) அவர்கள் காலத்தில் இந்த அமைப்பு இல்லை என்பதால் மௌலிது ஷரீபை பித்அத் என்று கூறினால் ஸஹாபாக்களையும், பின்னர் வந்த இமாம்களையும் பித்அத் வாதிகள் என்று கூறவேண்டியது வரும்.

1) ரஸூல் (ஸல்) அவர்கள் காலத்தில் இல்லாத நிலையில் மார்க்கத்தில் ஸஹாபாக்கள் ஏற்படுத்திய நல்ல பித்அத்துகள் அதிகம் உண்டு.

<u>உதாரணமாக</u>

1. குர்ஆனை ஒன்று திரட்டியது.
2. குர்ஆனுக்கு ஜபர், ஜேர், நுக்தா, ருகூஃ, ஜுஸ்வு ஏற்படுத்தியது.
3. தராவீஹ் ஜமாஅத் ஏற்படுதிதியது.
4. ஜும்ஆவில் இரண்டு பாங்குகள் ஏற்படுத்தியது.
5. பெண்கள் பள்ளிக்கு வருவதை தடுத்தது.
6. ஜகாத்தை மறுத்தவரிடம் போர் தொடுத்த்து.
7. அஹ்ல கிதாப் பெண்களை திருமணம் செய்வதை தடுத்தது.
8. வியாபாரிகளிடம் வரி வசூல் செய்தது.
9. பைதுல் மாலில் இருந்து சிலருக்கு சம்பளம் கொடுத்தது.

2) ரஸூல் (ஸல்) அவர்கள் காலத்தில் இல்லாமல் இன்று வழக்கத்தில் உள்ள பித்அத்தே ஹசனாக்கள்.

<u>உதாரணமாக</u>

1. ஈமான்முஜ்மல், ஈமான் முபஸ்ஸல், என்று பிரித்து கூறுவது. ஐந்து கலிமாக்களைப் பிரித்துக் கூறுவது. தய்யிபு, ஷஹாதத் என்று ஒவ்வொன்றுக்கும் பெயர் கூறுவது. இது எதுவுமே நபி (ஸல்) அவர்கள்,ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபஃதாபியீன்கள் காலத்தில் பழக்கத்திலில்லை.

2. மதரஸாக்களில் ஓதித்தரப்படும் நஹ்வு, சர்ஃப், மன்திக், மஆனி, பயான், பதீஃ, உசூல் ஹதீஸ், உஸூல் பிக்ஹ், நபி (ஸல்) அவர்கள் காலத்தில் இல்லை.

3. ஹனபி, ஷாஃபி, மாலிகி, ஹன்பலி, இந்நான்கு மத்ஹபுகள். சிஷ்திய்யா, காதிரிய்யா போன்ற தரீக்காக்கள் இவையனைத்தும் பிற்காலத்தில் வந்தன.

3) நபி (ஸல்) காலத்தில் நடைமுறையிலேயே
இல்லாத இன்னும் எத்தனையோ பித்அத்துகள் இன்று நம்மடையே நடைபெறுகிறது.

உதாரணமாக

1. இமாம் முஅத்தினுக்கு சம்பளம் தருவதும் பித்அத்துதான்.

2. பிள்ளைகளுக்கு பெயர் சூட்டு விழா, நிச்சயதார்த்தவிழா, கல்யாண பத்திக்கை, கல்யாண மேடை, மண்டபம், தப்தர் எனும் திருமணப் பதிவேடு இவைகளும் பித்அத்துதான்.

3. கடிகாரத்தில் மணி நிமிடம் பார்த்து பாங்கு, இகாமத் சொல்வது பித்அத்துதான். சூரியனைப் பார்த்துதான் சொல்லவேண்டும்.

4.பட்டமளிப்பு விழா மாநாடுகளையும் சஹாபாக்கள் நடத்தவில்லை. யாருக்கும் தலைப்பாகை கட்டி பட்டம் கொடுக்கவில்லை இவைகளும் பித்அத்துதான்.

(3)ஜனாஸா துஆ

ஜனாஸா தொழுகைக்குப் பின் துஆ ஓதலாமா?

1. பொதுவாக பர்ளு தொழுகைக்குப் பின் துஆ ஒப்புக்கொள்ளப்படுவதாக ஹதீஸில் வருகிறது.

(திர்மிதி- **9936,** நஸயி- **3838**)

عَنْ أَبِى أُمَامَةَ قَالَ قِيلَ يَا رَسُولَ اللَّهِ أَىُّ الدُّعَاءِ أَسْمَعُ قَالَ « جَوْفُ اللَّيْلِ الآخِرُ وَدُبُرَ الصَّلَوَاتِ الْمَكْتُوبَاتِ

(نسائ 9936)(ترمذي 3838)

2. பர்ளான தொழுகைக்குப்பின் ரஸூல் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள்.

(முஸ்லிம் - **1363,** இப்னு ஹிப்பான் - **2001** நஸயி- **1261** அபூதாவுத்- **1514** இப்னு மாஜா- **977** திர்மிதி- **299** அஹ்மத்- **23202**)

عَنْ عَائِشَةَ قَالَتْ كَانَ النَّبِىُّ –صلى الله عليه وسلم– إِذَا سَلَّمَ لَمْ يَقْعُدْ إِلاَّ مِقْدَارَ مَا يَقُولُ « اللَّهُمَّ أَنْتَ السَّلاَمُ وَمِنْكَ السَّلاَمُ تَبَارَكْتَ ذَا الْجَلاَلِ وَالإِكْرَامِ

(مسلم1363)(ابن حبان 2001)(نسائ 1261)(ابوداؤد 1514)(ابن ماجة 977)(ترمذي 299)(احمد 23202)

3. பலர் கூட்டாக சேர்ந்து துஆ கேட்பதற்கும் குர்ஆன்,ஹதீஸில் ஆதாரம் இருக்கிறது.

1: رَبَّنَا تَقَبَّلْ مِنَّا إِنَّكَ أَنْتَ السَّمِيعُ الْعَلِيمُ (سورةالبقرة127)

2: رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا وَمَا لَهُ فِي الْآخِرَةِ مِنْ خَلَاقٍ (سورة البقرة 200)

93 வசனங்கள் இவ்வாறு வந்துள்ளது.

1: اللهم زينا بزينة الإيمان واجعلنا هداة مهتدين

(ابن حبان 1971)(نسائ 1288) (احمد 18820)

2: اللَّهُمَّ أَلِّفْ بَيْنَ قُلُوبِنَا وَأَصْلِحْ ذَاتَ بَيْنِنَا وَاهْدِنَا سُبُلَ السَّلاَمِ وَنَجِّنَا مِنَ الظُّلُمَاتِ إِلَى النُّورِ وَجَنِّبْنَا الْفَوَاحِشَ مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ وَبَارِكْ لَنَا فِى أَسْمَاعِنَا وَأَبْصَارِنَا وَقُلُوبِنَا وَأَزْوَاجِنَا وَذُرِّيَّاتِنَا وَتُبْ عَلَيْنَا إِنَّكَ أَنْتَ التَّوَّابُ الرَّحِيمُ وَاجْعَلْنَا شَاكِرِينَ لِنِعْمَتِكَ مُثْنِينَ بِهَا قَابِلِيهَا وَأَتِمَّهَا عَلَيْنَا

(ابن حبان 996) (ابوداؤد 971)(طبراني3189)(حاكم 977)

பல நூறு துஆக்கள் இவ்வாறு வந்தள்ளது.

عن حبيب بن مسملة الفهري قال : سمعت رسول الله صلى الله عليه و سلم يقول لا يجتمع ملأ فيدعو بعضهم و يؤمن البعض إلا أجابهم الله مستدرك الحاكم

ஒரு கூட்டத்தினர் ஒன்று சேர்ந்து அதில் ஒருவர் துஆச் செய்ய மற்றவர்கள் ஆமீன் கூறினால் அவர்களின் துஆவை அல்லாஹ் ஏற்றுக் கொள்கிறான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் -ஹாகிம்

4. இந்த அடிப்படை ஆதாரங்களை வைத்து பர்ளான 5 வக்த் தொழுகைக்கு பின்பும் பர்ளான ஜனாஸா தொழுகைக்குப் பின்பும் தற்போது நடைமுறையில் கூட்டாக துஆ ஓதும் வழக்கம் நமது முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட பித்அத்தே ஹஸனா (நல்ல பித்அத்) ஆகும்.

பலநூறு துஆக்கள் இவ்வாறு வந்துள்ளது.

5. எதற்கு அசல் ஆதாரம் குர்ஆன்,ஹதீஸில் இருக்கிறதோ இன்னும் நடைமுறையில் அமைப்பு புதிதாக இருக்கிறதோ அதுவே பித்அத்தே ஹஸனாவாகும்.

6. 5 வக்த் தொழுகைக்குப் பின் கூட்டு துஆ ஓதலாம். ஜனாஸா தொழுகைக்குப்பின் ஓதக்கூடாது என்று பிரித்து காட்டுவதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. காரணம் இரண்டு நடைமுறைகளுமே ரஸூல் (ஸல்) அவர்கள் காலத்தில் இல்லை. இரண்டுமே பித்அத்தே ஹஸனாவாகும்.

7. ஜனாஸா தொழுகைக்கப்பின் துஆ ஸஹாபாக்கள் காலத்திலிருந்தே நடைமுறையில் இருந்து வருகிறது. கீழ் கண்ட ஹதீஸ்கள் அதற்கு ஆதாரமாக உள்ளன.

عن أبي هريرة أن رسول الله صلى الله عليه وسلم قال: "إذا صليتم على الميت فاخلصوا له الدعاء

(ابن حبان 3076)(ابوداؤد 3201)(ابن ماجة 1564)(بيهقي 6755)

1) நீங்கள் ஜனாஸா தொழுகை நடத்தினால் உடனடியாக இகலாசுடன் துஆச் செய்யுங்கள்.

(இப்னு ஹிப்பான் - **3076** அபூதாவுத்- **3201** இப்னு மாஜா- **1564** பைஹகி- **6755**)

عَنِ ابْنِ عَبَّاسٍ أَنَّ النَّبِىَّ –صلى الله عليه وسلم– قَرَأَ عَلَى الْجِنَازَةِ بِفَاتِحَةِ الْكِتَابِ

(ابن ماجة 1562)(ترمذي 947)

2) ரஸூல் (ஸல்) ஜனாஸாவின் மீது பாத்திஹா ஓதினார்கள்

(இப்னு மாஜா- 1562 திர்மிதி- 947)

சிலர் இது தொழுகையில் ஓதுவதைக் குறிக்கும் என்கிறார்கள். ஆனால் ஹனபி மத்ஹபில் ஜனாஸா தொழுகையில் பாத்திஹா சூரா கிடையாது. எனவே இது தொழுதபின் பாத்திஹா ஓதுவதையே கறிக்கும்.

وصلى عليه رسول الله ودعا له وقال استغفروا له

(عمدة القاري شرح صحيح البخاري)(شرح سنن أبي داود)(مرقاة المفاتيح شرح مشكاة المصابيح)(تاريخ الإسلام للذهبي)

3) மூத்தாபோரில் ஷஹீதான ஜ.ஃபர் பின் அபூதாலிப் (ரலி) அவர்களுக்கு நபி (ஸல்) ஙாயிப் ஜனாஸா தொழவைத்தார்கள். மேலும் துஆ செய்தார்கள் இன்னும் அவர்களுக்காக இஸ்தி.ஃபார் செய்யும் படி கூறினார்கள்.

(புஹாரி ஷரஹ் உம்ததுல்காரி) (ஷரஹ் அபுதாவுத்) (மிஷ்காத் ஷரஹ் மிர்காத்) (தஹபீ இமாமின் தாரீகுல் இஸ்லாம்)

فلما حضرا ما زادا على الاستغفار له وعبد الله بن سلام رضي الله عنه فاتته الصلاة على جنازة عمر فلما حضر قال إنْ سبقتموني بالصلاة عليه فلا تسبقوني بالدعاء له

(المبسوط للسرخسي)(بدائع الصنائع)

4) ஒரு ஜனாஸாவில் கலந்து கொள்ள அப்துல்லாஹ் பின் சலாம் (ரலி) வந்தார்கள். அதற்குள் தொழுகை முடிந்து விட்டது. எனவே எனக்கு முன் தொழுது விட்டீர்கள் சரி துஆவையாவது என்னோடு சேர்ந்து ஓதுங்கள் என்றார்கள்.

(அல்மப்ஸூத்) (பதாயினுஸ் ஸனாயி.ஃ)

8. சில பிக்ஹ் கிதாபுகளில் ஜனாஸா தொழுகைக்குப்பின் துஆ மக்ரூஹ் என்று எழுதப்படுவது நீண்ட நெடிய துஆக்களை குறிக்கும். அதனால் தபன் செய்வது தாமதமாகும். அளவு நீண்ட துஆக்களை ஓதுவது மக்ரூஹ் என்று த.ஃவீல் செய்யப்படும்.

பராஅத் இரவில் மூன்று யாசீன் ஓதலாமா ?

1.பராஅத் இரவில் அதிகம் துஆச் செய்ய வேண்டும் என்று ஹதீஸ்களில் வருகிறது.

عن عثمان بن ابي العاص عن النبي صلي الله عليه و سلم إذا كان ليلة النصف من شعبان نادى مناد: هل من مستغفر فأغفر له هل من سائل فأعطيه

(பைஹகி (பழாயிலுல் அவ்காத்),இமாம் சுயூத்தி(ரஹ்)எழுதிய அல்பத்ஹுல் கபீர்,கன்ஜுல் உம்மால்35178)

நபி (ஸல்)அவர்கள் அந்த இரவில் ஸஜ்தாவில் நீண்ட துஆ ஓதினார்கள்,

عن عائشة رضي الله عنها قالت لما كانت ليلة النصف من شعبان وهو ساجد وهو يقول سجد لك سوادي وخيالي فأمن لك فؤآدي وابوء لك بالنعم

நூல்:பைஹகி (பாபு பீ பஜ்லி லைலதின் நிஸ்ப்)

2.யாசின் ஓதி துஆச் செய்தால் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதாக ஹதீஸில் வருகிறது.**يس لما قرات له**

(தப்ஸீர் ரூஹுல் பயான் சூரா யாசீன்,இமாம் சகாவீ (ரஹ்) எழுதிய அல் மகாசிதுல் ஹஸனாஹ்1347,

عن عائشة أن رسول الله صلى الله عليه و سلم قال : إن في القرآن لسورة تشفع لقرائها ويغفر لمستمعها ألا وهي سورة يس تدعى في التوراة المعمة قيل يا رسول الله وما المعمة ؟ قال : تعم صاحبها بخير الدنيا وتدفع عنه أهاويل الآخرة وتدعى الدافعة والقاضية قيل : يا رسول الله وكيف ذلك ؟ قال : تدفع عن صاحبها كل سوء وتقضي له كل حاجة

(தப்ஸீர் அல் குர்துபி (சூரா யாசீன்), தப்ஸீர் ரூஹுல் பயான் (சூரா யாசீன்),தப்ஸீர் அஸ்ஸாவபி (சூரா யாசின்),தப்ஸீர் ஜலாலைன் ஹாஷியா (சூரா யாசின்)

3.இந்த ஹதீஸ்களின் அடிப்படையில் 3 யாசின் சூரா ஓதி துஆக்கள் செய்வது ஹதீஸ்களின் அடிப்படையில் அமைந்த பித்அத்தே ஹஸனாவாகும். மேலும் பிக்ஹ் வாசகமும் இது நல்ல பித்அத் ஆகுமானது என்றே சுட்டிக்காட்டுகிறது.

وَوُقُوفَ النَّاسِ يَوْمَ عَرَفَةَ فِي غَيْرِهَا تَشْبِيهًا بِالْوَاقِفِينَ لَيْسَ بِشَيْءٍ فَتَعُمُّ الْعِبَادَةِ مِنْ فَرْضٍ وَوَاجِبٍ وَمُسْتَحَبٍّ فَيُفِيدُ الْإِبَاحَةَ ، وَقِيلَ يُسْتَحَبُّ

அரபா நாளில் அரபா மைதானம் அல்லாத மற்ற ஊர்களில் மக்கள் ஒன்று கூடி துஆச் செய்வது ஹதீஸில் ஆதாரமில்லாத ஒரு காரியம் என்றாலும் அது அனுமதிக்கப்பட்டதே முஸ்தஹப்பு என்றும் கூறப்பட்டுள்ளது.(ரத்துல் முக்தார் 2/180)

இந்த செயலை எப்படி ஆகுமானது என்று சொல்லப்பட்டதோ அது போலவே பராஅத் இரவில் 3 யாசீன் ஓதி துஆச் செய்வதும் ஆகுமானது என்று அந்த வாசகத்தின் மூலம் விளங்கப்படுகிறது.எனவே பராஅத் இரவில் 3 யாசின் ஓதி துஆச் செய்வதற்கு எந்த தடையுமில்லை.செய்வதால் நன்மை கிடைக்கும்.துஆ ஏற்றுக் கொள்ளப்படும் என்று ஆதரவு வைக்கப்படுகிறது.

குறிப்பு: இதில் உள்ள கிதாபுகளின் பக்கங்களும் ஹதீஸ் எண்களும் (المكتبة الشاملة) அல்மக்தபத்துஷ் ஷாமிலாவில் உள்ளவையாகும்.